# Quiz Islamique - வினாடி வினா 2024

## INVITÉS

## ASSOCIATION BEL AVENIR

| | | |
|---|---|---|
| | ***QUESTIONS 1 POINT*** | |
| 1 | *தந்தை இல்லாத 2 நபிமார்கள் யார் யார்?* | **Quels sont les 2 prophètes qui n'ont pas de père ?** |
| | *1, ஆதம் (அலை) 2, ஈஸா (அலை)* | **Ce sont Adam عليه السلام et 'Issâ عليه السلام.** |
| 2 | *எந்த நபி அல்லாஹ்வுடன் நேரடியாகப் பேசியது?* | **Quel prophète est connu pour avoir parlé directement avec Allah ﷻ ?** |
| | *மூஸா (அலை)* | **C'est Mussa عليه السلام.** |
| 3 | *எந்த நபி தன் மக்களால் நெருப்பில் வீசப்பட்டார்?* | **Quel prophète fut jeté dans un feu par son peuple ?** |
| | *இப்ராஹிம் (அலை)* | **C'est Ibrâhim عليه السلام.** |
| 4 | *அனைத்து குடிமக்களும் ஏற்றுக்கொண்ட தீர்க்கதரிசி யார்?* | **Qui est le prophète dont tous les habitants du peuple vers lequel il a été envoyé ont cru en lui ?** |
| | *யூனுஸ் (அலை)* | **C'est Yûnus عليه السلام.** |
| 5 | *அல்லாஹ்வின் அனுமதியுடன் எந்த நபி ஜின்களை தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தார்?* | **Quel prophète avait sous son autorité des djinns par la permission d'Allah ﷻ ?** |
| | *சுலைமான் (அலை)* | **C'est Sulaymân عليه السلام.** |
| 6 | *'ஆத்' இன மக்களின் நபி யார்?* | **Qui était le prophète du peuple des 'Ad ?** |
| | *ஹூத் (அலை).* | **C'est Hûd عليه السلام.** |
| 7 | *தமூத் மக்களின் நபி யார்?* | **Qui était le prophète du peuple des Thamûd ?** |
| | *ஸாலிஹ் (அலை).* | **C'est Sâlih عليه السلام.** |
| 8 | *'ஆத்' மக்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது?* | **Quel fut le châtiment du peuple des 'Ad ?** |
| | *அவர்கள் கடுமையான காற்றால் தண்டிக்கப்பட்டனர்.* | **Ils furent châtiés d'un vent violent et destructeur.** |
| 9 | *'தமூத்' மக்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது?* | **Quel fut le châtiment du peuple des Thamûd ?** |
| | *அவர்கள் கடுமையான சப்ததால் தண்டிக்கப்பட்டனர்.* | **Ils furent saisis d'un Cri qui les extermina.** |
| 10 | *ஆயத்துல் குர்ஸி எந்த சூராவில் உள்ளது ?* | **Dans quelle Sourate est Ayat ul Kursiyy (le verset du Trône) ?** |
| | *சூரத்துல் பகரா* | **Dans la Sourate Al-Baqarah.** |

| | | |
|---|---|---|
| 11 | ரசூலுல்லாஹ் ( ஸல் ) இரண்டு ஒளிகள் என்று குறிப்பிட்டது, குர்ஆனில் எது ? | Le Messager d'Allah ﷺ a mentionné deux lumières dans le Coran, lesquelles sont-elles ? |
| | 1, அல்ஹம்து (ஃபாத்திஹா) சூராவும்<br>2, சூரத்துல் பகராவின் கடைசி இரண்டு வசனங்களும் | 1) La Sourate Al Fâtiha (Al Hamdu)<br>2) Les 2 derniers versets de la Sourate Al Baqarah. |
| 12 | குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதி என்று ரசூலுல்லாஹ் ( ஸல்) சொன்ன சூரா எது ? | D'après le Messager d'Allah ﷺ, quelle Sourate représente le tiers du Coran ? |
| | சூரத்துல் இஹ்லாஸ். | La Sourate Al Ikhlâss. |
| 13 | ஈமான் கொண்டவர்களுக்கு உதாரணமாக அல்லாஹ் குர்ஆனில் கூறிய இரு பெண்மணிகள் யாவர் ? | Qui sont les deux femmes qu'Allah ﷻ cite comme exemples pour les croyants dans le Coran ? |
| | 1, மரியம் (அலை)<br>2, ஆசிய (அலை) (66 :11, 12) | (Le Saint Coran, Sourate 66 ; 11-12)<br>1) Maryam عليها السلام<br>2) La femme de Pharaon, Assia عليها السلام. |
| 14 | பிஸ்மில்லாஹ் இரு முறை வரக்கூடிய குர்ஆன் சூரா எது ? | Quelle est la Sourate coranique dans laquelle la BasmaLlah est répétée deux fois ? |
| | சூரத்துல் நம்ல் | La Sourate An-Naml. |
| 15 | பிஸ்மில்லாஹ் இல்லாமல் ஆரம்பிக்கும் சூரா எது ? | Quelle sourate commence sans la BasmaLlah ? |
| | சூரத்துல் தவ்பாஹ் | La Sourate At Tawbah. |
| 16 | காஃபிரான பெண்களுக்கு உதாரணமாக அல்லாஹ் குர்ஆனில் கூறிய இரு பெண்மணிகள் யாவர் ? | Qui sont les deux femmes qu'Allah ﷻ cite dans le Coran comme exemples de femmes infidèles ? |
| | 1, நூஹ் (அலை) அவர்களின் மனைவி<br>2, லூத் (அலை) அவர்களின் மனைவி ( 66 : 10 ) | (Le Saint Coran, Sourate 66 ; 10)<br>1) La femme de Nouh عليه السلام<br>2) La femme de Lout عليه السلام. |
| 17 | நபி ﷺ அவர்களுக்கு எத்தனை மனைவிகள்? | Combien de femmes avait le prophète ﷺ ? |
| | அவருக்கு 13 மனைவிகள் இருந்தனர். | Il ﷺ avait 13 femmes. |
| 18 | நபி ﷺ அவர்களின் அதிக ஹதீஸ்களை அறிவித்த தோழர் யார்? | Quel compagnon a rapporté le plus de hadiths du prophète ﷺ ? |
| | அது அபூ ஹுரைரா (ரழி) (5374 ஹதீஸ்கள்). | C’est Abou Hurayra رضي الله عنه (5374 hadiths). |
| 19 | இஸ்லாத்தின் வரலாற்றில் முதன் முதலாக பாங்கு சொன்ன நபி தோழர் யார்? | Quel compagnon fut le 1er muezzin (à avoir fait l’adhan) de l’histoire de l’Islam ? |
| | பிலால் இப்னு ரபா (ரழி) | C’est Bilal ibn Rabah رضي الله عنه. |
| 20 | மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த போது நபி ﷺ அவர்களுடன் பயணம் செய்தவர் யார்? | Qui a fait le voyage avec le prophète ﷺ lors de l'émigration vers Médine? |
| | அபூபக்கர் (ரழி) | C’est Abou Bakr رضي الله عنه. |

| | | |
|---|---|---|
| 21 | நபி ﷺ அவர்களின் கூற்றுப்படி, எந்தத் தோழர் தனது சமூகத்தில் சட்டத்திற்குட்பட்ட மற்றும் சட்டவிரோதமான விஷயங்களில் மிகவும் படித்தவர்? | D’après le prophète ﷺ, quel compagnon est le plus instruit en matière de choses licites et illicites au sein de sa communauté ? |
| | முஆத் இப்னு ஜபல் (ரழி) | C’est Mu’adh ibn Jabal رضي الله عنه. |
| 22 | குர்ஆனில் எந்த சஹாபாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது? | Quel compagnon a été cité par son nom dans le Quran ? |
| | ஜைது இப்னு ஹாரிதா (ரழி), (33:37). | C’est Zayd ibn Haritha رضي الله عنه (33 :37). |
| 23 | உமர் இப்னு அல் ஹத்தாப் (ரழி) அவர்களின் மகளாகிய நபி (ஸல்) அவர்களின் மனைவி யார்? | Quelle femme du prophète ﷺ était la fille de ‘Omar ibn Al Khattab رضي الله عنه ? |
| | ஹஃப்ஸா பின்த் ‘உமர் (ரழி) | C’est Hafsah bint ‘Omar رضي الله عنها. |
| 24 | நபிகள் நாயகத்தைப் பற்றி அதிக ஹதீஸ்களை அறிவித்த பெண் யார்? | Quelle femme a rapporté le plus de hadiths sur le prophète ﷺ ? |
| | ‘ஆயிஷா பின்த் அபுபக்கர்(ரழி) (2210 ஹதீஸ்கள்). | C’est ‘Aisha bint Abou Bakr رضي الله عنها (2210 hadiths). |
| 25 | எந்தப் போரின் போது நபி ﷺ அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உதவ அல்லாஹ் வானத்திலிருந்து வானவர்களை அனுப்பினான்? | Durant quelle bataille Allah ﷻ envoya du ciel des anges pour venir en aide au prophète ﷺ et les musulmans ? |
| | பத்ர் போரின் போது. | C’est durant la bataille de Badr. |
| 26 | எந்தப் பெண் தன் கணவன் இறந்தபோது இந்த துஆவை சொன்னார்: إنَّا لله وَإنَّا إلَيهِ رَاجِعُونَ اللَّهُمَّ أجُرْنِي فِي مُصِيبَتِي وَأَخلِفْ لِي خَيرًا مِنْهَا (முஸ்லிம்)? | Quelle femme a dit cette invocation lorsque son mari fut décédé : إنَّا لله وَإنَّا إلَيهِ رَاجِعُونَ اللَّهُمَّ أجُرْنِي فِي مُصِيبَتِي وَأَخلِفْ لِي خَيرًا مِنْهَا (Muslim) ? |
| | உம்மு ஸலமா (ரழி) | C’est Oumm Salamah رضي الله عنها. |
| 27 | நபி ﷺ அவர்களின் வாழ்நாளில் மரணித்த 2 மனைவிகள் யார்? | Quelles sont les 2 femmes du prophète ﷺ qui furent décédées de son vivant ? |
| | கதீஜா பின்த் குவைலித் (ரழி) மற்றும் ஜைனப் பின்த் குஸைமா (ரழி) | Ce sont Khadijah bint Khuwaylid رضي الله عنها et Zaynab bint Khuzaymah رضي الله عنها. |
| 28 | நபி ﷺ அவர்களுக்கு குர்ஆன் எத்தனை ஆண்டுகள் ‘வஹி’ மூலம் இறங்கியது ? | Combien d'années a duré la révélation du Coran sur le Prophète ﷺ ? |
| | (23 ஆண்டுகள் ) : மக்காவில் : 13 ஆண்டுகள் , மதீனாவில் : 10 ஆண்டுகள் | La révélation du Coran sur le Prophète a duré 23 ans, dont 13 ans à la Mecque et 10 ans à Médine. |
| 29 | தவ்ஹீத் என்றால் என்ன ? | Qu'est-ce que le Tawhid ? |
| | அல்லாஹ்வை மட்டும் ஒருமைப்படுத்தி வணங்குதல் | C'est le fait d'adorer uniquement Allah ﷻ dans l'Unicité. |
| 30 | இஸ்லாமிய மாதம் எத்தனை நாட்களை கொண்டது? | Combien de jours compte un mois islamique ? |
| | 29 நாட்கள் அல்லது 30 நாட்கள் | Un mois islamique compte 29 ou 30 jours. |

| | | |
|---|---|---|
| 31 | நாம் பிறந்து, வளர்ந்து, மௌத்தாகும் எல்லா விஷயங்களும் எழுதப்பட்டு, வானில் உள்ள மூலப்பதிவேட்டின் பெயர் என்ன ? | Quel est le nom du registre original dans le ciel où toutes les choses, que ce soit notre naissance, notre mort etc. sont écrites ? |
| | லவ்ஹுல் மஹ்ஃபூல் | C'est Al Lawhul Mahfuzh. |
| 32 | முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்ற ஆண் யார் ? | Qui a été le premier homme à embrasser l'Islam ? |
| | அபூபக்கர் ஸித்தீக் (ரழி) | C'est Abou Bakr رضي الله عنه. |
| 33 | இஸ்லாத்தை ஏற்ற முதல் சிறுவர் யார் ? | Qui a été le premier garçon à embrasser l'Islam ? |
| | அலி இப்னு அபி தாலிப் (ரழி). | C'est 'Ali ibn Abi Talib رضي الله عنه. |
| 34 | முதன்முதலாக இஸ்லாத்திற்காக உயிர் துறந்த ஆண் தியாகி யார் ? | Qui a été le premier martyr homme à mourir pour l'Islam ? |
| | யாஸிர் பின் ஆமிர் (ரழி). | C'est Yâsir ibn Amir رضي الله عنه. |
| 35 | முதலில் இஸ்லாத்தை ஏற்ற பெண்மணி யார் ? | Qui a été la première femme à embrasser l'Islam ? |
| | குவைலித் உடைய மகள் அன்னை கதீஜா (ரழி) | C'est Khadijah bint Khuwaylid رضي الله عنها. |
| 36 | இஸ்லாமிய வரலாற்றில் முதல் பெண் உயிர் தியாகியின் பெயர் என்ன ? | Comment s'appelle la première femme martyre à mourir pour l'Islam ? |
| | ஹய்யாத் உடைய மகள் அன்னை சுமையா (ரழி) | C'est Sumayyah bint Khayyat رضي الله عنها. |
| 37 | அல்லாஹ்வின் பெயர் 'அல்ஹய்' என்பதின் அர்த்தம் என்ன? | Que signifie le Nom d'Allah Al Hayy ? |
| | அல்லாஹ் உயிருள்ளவன் என்பது இதன் பொருள் | Cela signifie qu'Allah ﷻ est Le Vivant. |
| 38 | அல்லாஹ்வின் பெயர் அல் ( خ ) ஹாலிக் என்பதன் அர்த்தம் என்ன? | Que signifie le Nom d'Allah Al Khaliq ? |
| | அல்லாஹ் தான் படைக்க கூடியவன் என்பது இதன் பொருள் | Cela signifie qu'Allah ﷻ est Le Créateur. |
| 39 | அல்லாஹ்வின் பெயர் அல் மாலிக் என்பதன் அர்த்தம் என்ன? | Que signifie le Nom d'Allah Al Malik ? |
| | அல்லாஹ் அரசன் என்பது இதன் பொருள் | Cela signifie qu'Allah ﷻ est Le Roi. |
| 40 | அல்லாஹ்வின் பெயர் அல்அஹத் என்றால் என்ன? | Que signifie le Nom d'Allah Al Ahad ? |
| | அல்லாஹ் ஒருவனே என்பது இதன் பொருள் | Cela signifie qu'Allah ﷻ est L'Unique. |
| 41 | அல்லாஹ் அல்ஹக்கிம் என்ற பெயரின் அர்த்தம் என்ன? | Que signifie le Nom d'Allah Al Hakim ? |
| | அல்லாஹ் ஞானமுடையவன் என்பது இதன் பொருள் | Cela signifie qu'Allah ﷻ est Le Sage. |
| 42 | அல்லாஹ்வின் பெயர் அல்கஃபூர் என்றால் என்ன? | Que signifie le Nom d'Allah Al Ghafour ? |
| | அல்லாஹ் மன்னிப்பவன் என்பது இதன் பொருள் | Cela signifie qu'Allah ﷻ est Le Pardonneur. |

| | | |
|---|---|---|
| | **QUESTIONS 2 POINTS** | |
| **1** | *ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தொடர்ச்சியான 4 நபிமார்கள் யார் யார்?* | **Quels sont les 4 prophètes de même famille qui se sont succédé ?** |
| | *இப்ராஹீம்(அலை), அவர்களின் மகன் இஸ்ஹாக் (அலை), அவர்களின் மகன் யாகூப் (அலை), அவர்களின் மகன் யூசுப் (அலை).* | **Ce sont Yusuf عليه السلام fils de Ya'qub عليه السلام fils de Ishâq عليه السلام fils de Ibrahim عليه السلام.** |
| **2** | *‘உலுல் அஸ்ம்’ பெயர் பெற்ற 5 நபிமார்கள் யார்?* | **Qui sont les 5 prophètes doués de fermeté (Ulul ‘azm) ?** |
| | *5 நபிமார்கள்*<br><br>*முஹம்மது ﷺ, நூஹ் (அலை), இப்ராஹிம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை)* | **Ce sont Muhammad ﷺ, Nuh عليه السلام, Ibrahim عليه السلام, Mussa عليه السلام et ‘Issa عليه السلام.** |
| **3** | *மையத்து தொழுகையில் கலந்து கொண்டால் என்ன நன்மை கிடைக்கும் ?*<br>*மேலும் மையத்தை அடக்கும் வரை இருந்தால் என்ன நன்மை கிடைக்கும்?* | **Quelle est la récompense concernant la Salât Janazah (prière sur le mort) et l'enterrement du mort ?** |
| | *மையத் தொகையில் கலந்து கொண்டால் ஒரு ‘கீராத்’ நன்மை கிடைக்கும்.*<br><br>*மேலும் அடக்கும் வரை இருந்தால் அதற்கும் ஒரு ‘கீராத்’ நன்மை கிடைக்கும். ஒரு ‘கீராத்’ என்றால் உஹது மலையின் அளவு நன்மையாகும்.* | **La récompense de celui qui assiste à la Salât Janazah vaut un Qirât, et un Qirât a la grandeur de la montagne d'Ouhoud. Celui qui assiste à la Salât Janazah et assiste à l'enterrement du mort jusqu'à sa fin aura la récompense de 2 Qirât.** |
| **4** | *ஹிஜ்ரத் என்றால் என்ன?* | **Qu'est-ce que la Hijrah ?** |
| | *வாழும் நாட்டில் கொடுமை பொறுக்க முடியாமல் இறைவனுக்காக நாடு துறந்து அன்னிய நாட்டில் தஞ்சம் புகுவது.* | **C'est le fait d'abandonner le pays dans lequel on vit en se réfugiant dans un pays étranger, étant incapable de supporter la cruauté vis-à-vis de notre religion du pays dans lequel on vit.** |
| **5** | *கப்ரில் தண்டனை அனுபவிக்கும் இருவர் பற்றி நபி ﷺ அவர்கள் சொன்னது என்ன ?* | **Qu'a dit le Prophète ﷺ au sujet des deux personnes qui seront punies dans la tombe ?** |
| | - *சிறுநீர் கழித்துவிட்டு சுத்தம் செய்யாமல் செல்பவர் / பிறர் பார்க்கும்படி சிறுநீர் கழிப்பவர்.*<br><br>- *கோள் சொல்லிக்கொண்டிருப்பவர்.* | **Une personne est punie car lorsqu'elle urinait, elle ne se nettoyait pas / qui urinait devant les autres et une personne est punie car elle colportait (rapporter des médisances faites à l'encontre d'une personne à la personne concernée).** |

| | | |
|---|---|---|
| 6 | ஹதீஸ் கிரந்தங்கள் சிலவற்றின் பெயர்கள் ? | Citez 5 noms de recueils de hadiths. |
| | புஹாரி, முஸ்லிம், அபுதாவூத்,<br>திர்மிதி, இப்னுமாஜா,<br>முஸ்னத் அஹ்மத், நஸயீ | Ex : Boukhari, Muslim, Abu Dawud, Tirmidhi,<br>Ibn Majah, Musnad Ahmad, Nasa'i, Ibn Hibban… |
| 7 | லைலத்துல் கத்ரில் என்ன ஓத வேண்டும்? | Quelle invocation doit-on réciter durant Laylatul Qadr ? |
| | اَللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ<br>(அல்லாஹும்ம இன்னக்க அஃப்வுன் துஹிப்புல் அஃப்வ ஃபஉஃபு அன்னீ.)<br>இறைவா! நிச்சயமாக நீ மன்னிக்கக்கூடியவன். மன்னிப்பை விரும்புகின்றாய். என்னை மன்னிப்பாயாக. (அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) ஆதாரம்: திர்மிதி) | اَللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ<br>Allahumma innaka 'afuwwun tuhibbul 'afwa fa'fu'annee<br>Seigneur ! Certes, Tu es Indulgent. Tu aimes le pardon, alors Pardonne-moi. |
| 8 | நயவஞ்சகனின் அறிகுறிகள் ? | Quels sont les signes de l'hypocrite ? |
| | 1,பேசினால் பொய்யே பேசுவான்<br>2, வாக்களித்தால் மீறுவான்<br>3, நம்பினால் துரோகம் செய்வான்<br>என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார் | 1) Lorsqu'il parle, il ment<br>2) Lorsqu'il promet, il viole sa promesse<br>3) Lorsqu'on lui confie un dépôt, il est déloyal. |
| 9 | ஹிஜ்ரி (அரபி) மாதங்கள் பெயர் என்ன? | Quels sont les noms des mois du calendrier Hégirien arabe ? |
| | 1. முஹர்ரம்,<br>2.ஸபர்,<br>3.ரபிஃயுல் அவ்வல்,<br>4.ரபிஃயுல் ஆகிர்,<br>5. ஜுமதா உல் ஊளா<br>6. ஜுமதா உல் ஆஹிரா,<br>7.ரஜப்,<br>8.ஷ'பான்,<br>9.ரமழான்,<br>10.ஷவ்வால்,<br>11.துல் கஃதா,<br>12.துல் ஹிஜ்ஜா. | 1) Muharram<br>2) Safar<br>3) Rabi'ul Awwal<br>4) Rabi'ul Akhir<br>5) Jumadal Ula<br>6) Jumadal Akhira<br>7) Rajab<br>8) Sha'bân<br>9) Ramadân<br>10)Shawwal<br>11)Dhul Qa'dah<br>12)Dhul Hijjah |
| 10 | அஸ்மாஉல் ஹுஸ்னாவிலிருந்து அல்லாஹ்வுடைய ஆறு பெயர்களை கூறுக ? | Citer 6 Noms d'Allah autre qu'Allah parmi Asma ul Husna. |
| | யா ரஹ்மான், யா ரஹீம், யா மாலிக்,<br>யா குத்தூஸ், யா சலாம், யா முஃமின் ……. | Ex : Ar Rahman, Ar Rahim, Al Malik, Al Quddus, As Salaam, Al Mu'min... |

| | | |
|---|---|---|
| 11 | **பாவமன்னிப்புக் கோரி யூனுஸ் (அலை) அல்லாஹ்விடம் செய்த பிரார்த்தனை என்ன?** | **Quelle est l'invocation qu'a faite Yûnus عليه السلام à Allah pour lui demander pardon ?** |
| | لَآ إِلَٰهَ إِلَّآ أَنتَ سُبْحَٰنَكَ إِنِّى كُنتُ مِنَ ٱلظَّٰلِمِينَ | |
| | லா இலாஹா இல்லா அன்த சுபுஹானக இன்னீ குன்து மின ழாலிமீன்<br>“உன்னைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவர் அல்ல, உனக்கே புகழும் தூய்மையும்! நான் உண்மையிலேயே அநீதி இழைத்தவர்களில் ஒருவனாக இருந்தேன்.” (21 : 87). | Lâ ilaha illâ anta, Soubhânaka, Innî kountou mina dhâlimîn<br>«Nul n'est digne d'être adoré en dehors de Toi, Gloire et Pureté à Toi ! J'ai été vraiment du nombre des injustes» (Al-Quran 21 : 87). |
| 12 | **‘ஜகாதுல் ஃபித்ர்’ என்றால் என்ன?** | **Qu'est-ce que la « Zakât al-Fitr » ?** |
| | ‘ஜகாதுல் ஃபித்ர்’ என்பது ரமழானின் நோன்பு முடிய ஓரிரு தினங்களுக்கு முன்பிருந்து, பெருநாள் தொழுகைக்காக மக்கள் செல்வதற்கு முன்னர் வரை ஒவ்வொரு முஸ்லிமும் செலுத்தவேண்டிய கட்டாய தர்மத்தைக் குறிக்கும்.<br><br>ஒருவர் தனது பொறுப்பில் இருக்கும் சிறு பிள்ளை, பெற்றோர், அடிமை உட்பட அனைவருக்குமாக இந்த கட்டாய ஜகாத்தை வழங்கியாக வேண்டும். | « Zakat al-Fitr » fait référence à l'aumône obligatoire que chaque musulman paie un jour ou deux avant la fin du jeûne du mois de Ramadan et avant que les gens ne partent pour la prière de l'Aïd. Le chef de la famille doit donner cette Zakât obligatoire pour lui-même et toutes les personnes à charge, y compris les enfants mineurs, les parents et les esclaves. |
| 13 | **ஜகாதுல் ஃபித்ராவை ஏன் கொடுக்க வேண்டும் ?** | **Pourquoi donner Zakât al-Fitr ?** |
| | ‘நோன்பாளி வீண் விளையாட்டுக்கள், தேவையற்ற பேச்சுக்கள் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தால், அதற்குப் பரிகாரமாக அமைவதற்காகவும்<br><br>ஏழைகளுக்கு உணவாக அமைவதற்காகவும்’ ‘ஜகாதுல் பித்ரை’ நபி ﷺ அவர்கள் கடமையாக்கினார்கள். | Le Prophète ﷺ a rendu la « Zakat al-Fitr » obligatoire afin de valider et purifier son jeûne car il se pourrait que la personne qui jeûne s'est engagée dans des jeux vains, des discussions futiles etc. Donc, la personne paie la Zakât al-Fitr pour compenser cela et pour faire de la nourriture aux pauvres. |
| 14 | **அண்டை வீட்டாரைத் தொந்தரவு செய்பவரைப் பற்றி நபி ﷺ என்ன சொன்னார்?** | **Qu'est-ce que le prophète ﷺ a dit concernant celui qui dérange le voisin ?** |
| | அண்டை வீட்டாரை அவனது அநீதியிலிருந்து காக்காதவன் சொர்க்கத்தில் நுழைய மாட்டான் (முஸ்லிம்) | Celui qui ne préserve pas son voisin de son tort n'entrera pas au Paradis (Muslim). |
| 15 | **பெருமைக்குரியவரின் நடத்தை என்ன, அவருக்கு என்ன தண்டனை?** | **Quel est le comportement de l'orgueilleux et quel est son châtiment ?** |
| | சத்தியத்தை நிராகரித்து மக்களை இகழ்பவன் பெருமையுள்ளவன்.<br>அவன் சொர்க்கத்திற்குத் திரும்ப மாட்டான் என்பதே அவனுடைய தண்டனை. (முஸ்லிம்) | L'orgueilleux est celui qui rejette la vérité et méprise les gens.<br>Son châtiment est qu'il ne rentrera pas au Paradis. (Muslim) |

| | | |
|---|---|---|
| 16 | நல்ல சகவாசம் மற்றும் கெட்ட சகவாசம் பற்றி நபிகள் நாயகம் சொன்ன உதாரணம் என்ன? | Quels sont les exemples que le Prophète ﷺ a donné concernant la bonne compagnie et la mauvaise compagnie ? |
| | நல்ல தோழன் வாசனை திரவியம் செய்பவனைப் போன்றவன், கெட்ட நண்பன் கொல்லன் போன்றவன் (புகாரி) | Le bon compagnon est semblable au porteur de parfum, et le mauvais compagnon est semblable au forgeron. (Bukhari) |
| 17 | கோள் சொல்லுதல் என்றால் என்ன ? அதற்கான தண்டனை என்ன? | Qu'est-ce que le colportage et quel est son châtiment ? |
| | இருவருக்கிடையே முரண்பாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் ஒருவரின் வார்த்தையை இன்னொருவருக்கு தெரிவிப்பவர். இவர் சுவர்க்கத்தில் நுழையமாட்டார் (முஸ்லிம்) | Celui qui rapporte la parole d'une personne à une autre dans le but de créer une discorde entre eux. Celui-là ne rentrera pas au Paradis. (Muslim) |
| 18 | புறம் பேசுதல் என்றால் என்ன ?<br>அவதூறு என்றால் என்ன? | Qu'est-ce que la médisance et qu'est-ce que la calomnie ? |
| | புறம் பேசுதல் என்பது உங்கள் சகோதரனைப் பற்றிய உண்மையை அவர் அனுமதியின்றி வெளியில் சொல்வது,<br>அவதூறு என்பது உங்கள் சகோதரனைப் பற்றி பொய் சொல்வது. (முஸ்லிம்) | La médisance consiste à dire une vérité à propos de ton frère ce qu'il n'aime pas, et la calomnie consiste à dire un mensonge à propos de ton frère. (Muslim) |
| 19 | 3 பெரிய பாவங்கள் என்ன? | Quels sont les 3 plus grands péchés ? |
| | அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, பெற்றோருக்கு தீங்கு செய்வது மற்றும் பொய் சாட்சியம் சொல்வது(புகாரி) | Associer à Allah, causer du tort envers les parents et le faux témoignage. (Bukhari) |
| 20 | உண்மை சொல்வதன் நோக்கம் என்ன ?<br>பொய் சொல்வதன் நோக்கம் என்ன? | Quel est la finalité de la vérité et quel est la finalité du mensonge ? |
| | உண்மையின் இறுதியானது சுவர்க்கம் மற்றும் பொய்யின் இறுதியானது நரகம் (புகாரி) | La finalité de la vérité est le Paradis et la finalité du mensonge est l'Enfer. (Bukhari) |
| 21 | அல்லாஹ்விடம் ஆதம் (அலை) மற்றும் ஹவ்வா (அலை) மன்னிப்பு கேட்ட துஆ என்ன ? | Quelle invocation a été dite par Adam عليه السلام et Hawwa عليها السلام pour demander pardon à Allah ﷻ ? |
| | رَبَّنَا ظَلَمْنَا أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ<br>Rabbana zalamna anfusana wa-in lam taghfir lana watarhamnalanakoonanna mina alkhasireen | |
| | “எங்கள் இறைவா, நாங்கள் எங்களுக்கு நாமே அநியாயம் செய்து கொண்டோம். மேலும் நீ எங்களை மன்னித்து கருணை காட்டவில்லை என்றால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராகி விடுவோம்” என்று கூறினார்கள். (அல்-அராஃப் 7:23) | «O notre Seigneur, nous avons fait du tort à nous-mêmes. Et si Tu ne nous pardonnes pas et ne nous fais pas miséricorde, nous serons très certainement du nombre des perdants». (Al-Quran 7:23) |

| | QUESTIONS 3 POINTS | |
|---|---|---|
| 1 | தவ்ஹீதின் வகைகள் யாவை ? | Quels sont les types de Tawhid ? |
| | தவ்ஹீத் 3 வகைகள்:<br>இறையில் ஒற்றுமை (தவ்ஹித் உர் ருபுபிய்யா), அதாவது அகிலத்தின் படைப்பு, அரசாட்சி மற்றும் நிர்வாகத்தில் நாம் அல்லாஹ்வை ஒருங்கிணைக்க வேண்டும்.<br>2) வணக்கத்தில் ஒற்றுமை (தவ்ஹித் உல் உலூஹிய்யா), அதாவது வணக்கத்தில் அல்லாஹ்வை ஒருங்கிணைக்க வேண்டும், ஏனென்றால் வணக்கத்திற்கு தகுதியானவன் அவன் மட்டுமே, அவனைத் தவிர 'வணக்கப்படுவதற்கு' எதற்கும் உரிமை இல்லை.<br>3) அவனது பெயர்கள் மற்றும் தெய்வீக பண்புகளில் ஒற்றுமை (தவ்ஹித் அல்அஸ்மா வா அஸ்ஸிஃபாத்), அதாவது, அல்லாஹ்வின் பெயர்களிலும் தெய்வீக பண்புகளிலும் சிதைவு இல்லாமல், மறுப்பு இல்லாமல், ஒப்பிடாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். | Les 3 types de Tawhid sont :<br>1) l'Unicité dans Sa seigneurie (Tawhid ur Rububiyyah), c'est-à-dire qu'il faut unifier Allah dans la Création, la Royauté et l'Administration de l'Univers<br>2) l'Unicité dans l'adoration (Tawhid ul Uluhiyyah), c'est-à-dire qu'il faut unifier Allah dans l'adoration car Il est Le Seul qui mérite l'adoration et rien n'a le droit d'être adoré en dehors de Lui<br>3) l'Unicité dans Ses Noms et Attributs divins (Tawhid alAsma wa asSifaat), c'est-à-dire qu'il faut unifier Allah dans Ses Noms et Attributs divins sans déformation, sans négation, sans interroger sur le comment et sans comparer. |
| 2 | நபி ﷺ அவர்களின் கூற்றுப்படி, சொர்க்கம் வாக்களிக்கப்பட்ட 10 தோழர்கள் யார்? | D'après le Prophète ﷺ, qui sont les 10 compagnons promis au Paradis ? |
| | இவை:<br>• அபுபக்கர் சித்திக்(ரழி),<br>• 'உமர் இப்னு அல்கத்தாப் (ரழி),<br>• 'உஸ்மான் இப்னு 'அஃப்பான்(ரழி),<br>• 'அலி இப்னு அபி தாலிப்(ரழி),<br>• தல்ஹா இப்னு உபைதல்லாஹ்(ரழி),<br>• அஸ் ஸுபைர் இப்னு அல் 'அவ்வாம்(ரழி),<br>• 'அப்துர் ரஹ்மான் இப்னு 'அவ்ஃப்(ரழி),<br>• சாத் இப்னு அபி வக்காஸ்(ரழி) (ரழி),<br>• சாத் பின் சயீத்(ரழி) (ரழி),<br>• அபு உபைதா இப்னு அல் ஜர்ராஹ் (ரழி). | Ce sont :<br>• Abou Bakr as Siddîq,<br>• 'Omar ibn Al Khattab,<br>• 'Uthman ibn 'Affan,<br>• 'Ali ibn Abi Tâlib,<br>• Talha ibn Ubaydallah,<br>• Az Zubayr ibn Al 'Awwâm,<br>• 'Abd ar Rahman ibn 'Awf,<br>• Sa'd ibn Abi Waqqâs,<br>• Sa'd ibn Zayd,<br>• Abou Ubaydah ibn Al Jarrah رضي الله عنهم. |
| 3 | முஹம்மது நபி ﷺ அவர்கள் மிஃராஜ் பயணத்தின் போது (அல் இஸ்ரா வல் மிஃராஜ்) 7 வானங்களில் சந்தித்த நபிமார்கள் யார் யார்? | Quel sont les prophètes que le prophète Muhammad ﷺ rencontra au 1er, 2ème, 3ème, 4ème, 5ème, 6ème, 7ème ciel lors du Voyage nocturne et de l'Ascension (Al Israa Wal Mi'raaj) ? |
| | - முதல் வானம் : ஆதம் (அலை)<br>- 2 வது வானம் : 'ஈஸா (அலை) மற்றும் யஹ்யா (அலை)<br>- 3 வது வானம் : யூசுப் (அலை)<br>- 4 வது வானம் : இத்ரிஸ் (அலை)<br>- 5 வது வானம் : ஹாரூன் (அலை)<br>- 6வது வானம் : மூஸா (அலை)<br>- 7வது வானம் : இப்ராஹிம் (அலை). | - 1er ciel : Adam عليه السلام<br>2ème ciel : 'Issa عليه السلام et Yahya عليه السلام<br>- 3ème ciel : Yusuf عليه السلام<br>- 4ème ciel : Idris عليه السلام<br>- 5ème ciel : Harun عليه السلام<br>- 6ème ciel : Mussa عليه السلام<br>- 7ème ciel : Ibrahim عليه السلام. |

| | | |
|---|---|---|
| 4 | ஒரு முஸ்லிம் தன் சகோதரனுக்கு செய்ய வேண்டிய 5 கடமைகள் என்ன? | Quels sont les 5 devoirs d'un musulman envers son frère ? |
| | - சலாத்திருக்கு பதில் சொல்லுதல்<br>- நோயாளியை நலம் விசாரித்தல்<br>- அழைக்கும் போது அவரது அழைப்பிற்கு பதிலளித்தல்<br>- ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளுதல்<br>- தும்மும்போது, "அல்ஹம்துலிலாஹ்" என்று கூறும்போது "யர்ஹமுக்அல்லாஹ்" என்று கூறி பதிலளித்தல்.(முஸ்லிம்) | - Répondre au Salam de son frère<br>- Visiter son frère lorsqu'il est malade<br>- Répondre à l'invitation de son frère lorsqu'il invite chez lui<br>- Faire la prière mortuaire (janazah) sur son frère décédé<br>- Répondre en disant « yarhamukAllah » lorsque son frère éternue et dit « al HamduliLah ». (Muslim) |
| 5 | ஜகாத் கொடுப்பதற்கான சட்டம் என்ன? | Qu'est-ce que la loi de la Zakat ? |
| | 1)"நிசாப் " அளவை குறிப்பிட்ட பொருள்கள் அடைந்திருக்க வேண்டும்,<br>2) ஒரு வருடம் பூர்த்தியாகி இருக்க வேண்டும்.<br>3) நம்மிடம் இருக்கும் தங்கம், 85 கிராமை தாண்டினால், 2,5% ஜகாத் கொடுக்க வேண்டும்.<br>அது போலவே பணம் சேமிப்பாக இருந்தாலும் Gold மதிப்பிற்கு கணக்கிட்டு 2,5% ஜகாத் கொடுக்க வேண்டும்.<br>குற்றம் வராமல் இருக்க ஆலிம்களிடம் விபரம் கேட்டு அறியவும் | 1) Un certain type de biens doit avoir atteint le niveau de « Nissab »<br>2) Un an doit être complété en possession de certains biens<br>3) 2,5% de notre argent doit être payé en Zakât même si cet argent est une économie.<br>De même, si notre or dépasse 85 grammes, alors 2,5% de cet or doivent être payés en Zakât<br>Enfin, il faut demander aux savants religieux des clarifications afin d'éviter de commettre des erreurs lors du versement de la Zakat. |
| 6 | ஜகாத் யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் ? | A qui est destinée la Zakât ? |
| | 1) யாசிப்போர் (ஃபக்கீர்)<br>2) ஏழைகள் (மிஸ்கீன்)<br>3) ஸகாத் வசூலிப்போர்.<br>4) இஸ்லாத்தை தழுவ விரும்புவோர்.<br>5) அடிமைகளை விடுதலை செய்வதற்காக!<br>6) கடன்பட்டோர்.<br>7) இறைவழியில் அறப்போர் செய்வோர்.<br>8) பயணிகள் (வழிப்போக்கர்)<br>( அல்-குர்ஆன் 9:60 ) | 1) Les pauvres<br>2) Les indigents<br>3) Ceux qui travaillent dans la gestion de la Zakât<br>4) Ceux dont les cœurs sont à gagner à l'Islam, c'est-à-dire qu'ils viennent de se convertir à l'Islam, afin de les raffermir sur l'Islam<br>5) Pour l'affranchissement des esclaves<br>6) Ceux qui sont lourdement endettés<br>7) Ceux qui luttent dans le sentier d'Allah<br>8) Pour le voyageur en détresse.<br>(Al-Quran 9 : 60 ) |
| 7 | ஜகாத் யார் யாருக்கு கொடுக்ககக்கூடாது? | A qui nous ne devons pas verser la Zakât ? |
| | யார் யாருக்கு கொடுக்கக்கூடாது :<br>1) வசதியுள்ளோர்.<br>2) உடல் வலிமை பெற்றோர்.<br>3) தனது பெற்றோர், பிள்ளைகள் ( அல்-அஸ்லு வல்ஃபர்உ)<br>4) நபியின் குடும்பத்தினர்.<br>5) முஸ்லிமல்லாதோர்.<br>6) தீயவர்கள். | La Zakât ne doit pas être versée :<br>1) Aux personnes riches qui ont des biens suffisants<br>2) Aux parents qui sont en bonne condition physique<br>3) A nos enfants qui sont sous notre charge<br>4) A la famille du Prophète ﷺ<br>5) Aux non-musulmans<br>6) Aux personnes plongées dans les péchés. |

| | **QUESTION 4 POINTS OBLIGATOIRE !!!** | |
|---|---|---|
| 1 | *"ஸலவாத் இப்ராஹிமிய்யா» சொல்லவும், அதைத் தொடர்ந்து "சய்யிதுல் இஸ்திஃபர்" துஆவை சொல்லவும்.* | **Dites la « Salawat Ibrahimiyyah » suivie de l'invocation « Sayyidul Istighfar ».** |

## ஸலவாத்து.... Salawat Ibrahimiya

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ ، وَعَلَى آلِ مُحَمَّدٍ ، كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ
وَعَلَى آلِ إِبْرَاهِيمَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ ،
اللَّهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ ، وَعَلَى آلِ مُحَمَّدٍ ، كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ ،
وَعَلَى آلِ إِبْرَاهِيمَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

யா அல்லாஹ்! இப்ராஹீம் (நபி) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் நீ கருணை புரிந்தது போன்று,
முஹம்மத்(நபி) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் கருணை புரிவாயாக
நிச்சயமாக நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன்.
யா அல்லாஹ்! இப்ராஹீம் (நபி) அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தார்கள் மீதும் நீ பரகத் பொழிந்தது போன்று,
முஹம்மத் (நபி) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள் மீதும் நீ பரகத்தை பொழிவாயாக
நிச்சயமாக நீயே புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். ( புகாரி )

Ô Seigneur ! Prie sur Mohammed et sur la famille de Mohammed comme Tu as prié sur Ibrâhîm (Abraham) et sur la famille de Ibrâhîm, Tu es certes digne de louange et de glorification. Ô Seigneur ! Bénis Mohammed et la famille de Mohammed comme Tu as béni Ibrâhîm et la famille d'Ibrâhîm, Tu es certes digne de louange et de glorification

## سَيِّدُ الِاسْتِغْفَارِ

## "ஸய்யிதுல் இஸ்திஃபார்"

*பாவ மன்னிப்பு கேட்பதில் தலையாய துஆ*

*Sayyidul Istighfâr*

اللَّهُمَّ أَنْتَ رَبِّي لاَ إِلَهَ إِلَّا أَنْتَ ،
خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ ،
وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ ،
أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ ،
أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ ،
وَأَبُوءُ بِذَنْبِي فَاغْفِرْ لِي ، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

Allâhumma anta Rabbî lâ ilâha illâ Anta, Khalaqtanî wa anâ 'abduka, Wa anâ 'alâ 'ahdika wa wa'dika mastata'tu. A'ûdhu bika min sharri mâ sana'tu, Abû°u laka bi ni'matika 'alayya, wa abû°u bi dhanbî. Fa ghfir lî fa innahu lâ yaghfiru-dh-dhunûba illâ Anta.

யா அல்லாஹ் !
நீயே என் எஜமான். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை.
என்னை நீயே படைத்தாய். நான் உனது அடிமை.
உனது உடன்படிக்கையின்படியும் எனது வாக்குறுதியின் படியும்
என்னால் இயன்ற வரை நடப்பேன்.
நான் செய்த தீமையை விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.
நீ எனக்குச் செய்த அருளோடும் நான் செய்த பாவத்தோடும் உன்னிடம் மீள்கிறேன்.
எனவே என்னை மன்னிப்பாயாக!
உன்னைத் தவிர யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது.